உ
சிவமயம்

gistered as a News paper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

ஸ்தாபிதம் (1889)
ஆவணிமாதம்
28-ஈவ அரமாமானத

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருஅ] யாழ்ப்பாணம்— விய ஹுல ஆனிமீ சஉ (1946 ஜூன் 18 செவ்வாய்க்கிழமை) [இல உக

## ஸ்ரீலங்காவில் பதவிப் பங்கீடு

### எல்லார்க்கும் பதவிகள் உண்டு

### ஆற்றிலே பாய்கின்ற தண்ணீரை அள்ளிக்கொடுக்கத் தயக்கமா?

#### ஐக்கிய தேசீயக் கட்சியின் வளர்ச்சி

(நமது அரசியல் நிருபர் எழுதுகிறுர்)

மிஸ்ரர் சேனநாயக்காவைத் தலைவராகக்கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்பிறை போல வளர்ந்து வருகிறது. இலங்கையில் அரசியல் ஸ்தாபனங்களெனத் தம்மைச் சொல்லிக்கொள்ளும் ஸ்தாபனங்கள் யாவும் இந்தத் தேசீயக் கட்சியிற் சேர்வதற்கு நான் முந்தி நீ முந்தி என்று விழுந்தடித்துக்கொண்டு போகின்றன. ஸ்ரீ லங்காவின் தலைவர்கள் எனப்படுவோர் யாவரும் இந்தத் தேசீயக் கட்சியில் தமக்கு இடம் கிடைப்பதற்குத் தவங்கிடக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு இத்தகைய மகத்துவம் எதனுற் கிடைத்திருக்கிறது? அது வகுத்துள்ள வேலைத்திட்டம், ஸ்ரீலங்காவைப் பூரண சுயராச்சியத்திற் கொண்டுபோய் விட்டுவிடும், எனவே அக்கட்சியிற் சேர்ந்து ஒத்துழைத்தால் இலங்கை மக்கள் சுபிட்சம் அடைவர் என்ற சிறந்த தேசாபிமான சிந்தையால் உந்தப்பட்டு இக்கட்சிகளும் தலைவர்களும் ஐக்கிய தேசீயக் கட்சியை ஆலிங்கனம் செய்கிறுர்களா?

○

**ஆற்றிலேபோகுந் தண்ணீலை;.......**

எது எப்படியிருந்த போதிலும் மிஸ்ரர் சேனுயக்காதான் பிரதம மந்திரியாக வரப்போகிறுர் என்றவதந்தி நன்ருக வேரூன்றிவிட்டது. அவர் பிரதமரானுல் ஏனைய மந்திரிகளை நியமிப்பதும், அவர் பொறுப்பிலேயே வரும். எனவே காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டாமா? அவராக வலிய அழைக்கிறபோது அவரை ஆலிங்கன்ம் செய்துகொண்டால் மந்திரப்பதவி கிடைக்காதா? மந்திரிப்பதவிதான் கிடைக்காவிட்டாலும் உபமந்திரிப் பதவியாவது கிடைக்காதா? மந்திரி, உபமந்திரிப் பதவிகளைவிட வேறு பதவிகள் புது அரசியலில் சிருஷ்டிக்க முடியாதா? பிரதம மந்திரி மிஸ்ரர் சேனுயக்கா மாத்திரம் திருவுளமிரங்கி மனம்வைத்தால் என்னென்ன விதமான பதவிகள் சிருஷ்டிக்கப்படமாட்டா. புது அரசியலின்படி பின்வரும் பதவிகள் சிருஷ்டிக்கப்படலாம்.

| | |
|---|---|
| செனேற்சபைத் தலைவர் | 1 |
| செனேற்சபைஉபதலைவர் | 1 |
| கீழ்ச்சபைத் தலைவர் | 1 |
| கீழ்ச்சபை உபதலைவர் | 1 |
| மந்திரிகள் | 10 |
| உபமந்திரிகள் | 10 |
| ஆக | 24 |

இந்த 24 பதவிகளில் ஓர் பதவிதானும் அகப்படாத பட்சத்தில் மனம் சோர்வடையக் காரணமில்லை. மிஸ்ரர் சேனநாயக்கா மாத்திரம் மனம் வைத்தால் உலகிலுள்ள தேசங்கள் ஒவ்வொன்றுக்கும், ஸ்ரீ லங்காவின் பிரதிநிதியாக ஒவ்வொருவரை அனுப்பலாம். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தியா, கனடா, இற்றலி, ருஷியா, பிரான்ஸ், அப்கானிஸ்தானம், சிரியா, சியம் முதலாம் நாடுகளுக்குத் தன் பிரதிநிதிகளை அனுப்புதற்கு ஸ்ரீ லங்காவிற்கு லாயக்கில்லையா? இந்தப் பிரதிநிதிகளுக்குத் தனித்தனி ஆயிரக் கணக்கில் வேதனம் கொடுப்பதற்கு ஸ்ரீலங்கா தகுதியற்றதா? ஆற்றிற் போகிற தண்ணீரை ஆரும் அள்ளிக் குடிக்கலாகாதா?

○

**யார் சொன்னது?**

ஐக்கிய தேசியக் கட்சியை வகுப்புவாத ஸதாபனம் என்று யார் கூறியது? அது வகுப்புவாத ஸ்தாபனமென்ருல், அதன் காரியதரிசிகளில் ஒருவராக நமது ஸ்ரீமாந் நடேசன் எப்படித் தெரிந்தெடுக்கப்பட்டார்? இலங்கைக் காங்கிரசும் ஸ்தாபிதமான அக்காலத்தில் இதேநிலைமையில்தான் இருந்தது. சிங்களர், தமிழர், இஸ்லாமியர் யாவரும் அதில் சம அந்தஸ்துடன் அங்கத்துவம் வகித்தனர். ஆனுல் காலஞ்செல்லச்செல்ல அது சிங்களக் காங்கிரசாக மாறியது அதேபோல இந்த ஐக்கியதேசீயக்கட்சியும் தேர்தல் முடிந்து மந்திரசபை நியமிக்கப்பட்டபின்னர் அதே நிலைமையை அடையமாட்டாது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்று கடாவுவது சந்தேகப் பேர்வழிகளின் இயல்பு.

### வல்லரசுகள் மகாநாடு

இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா, பிரான்ஸ் என்னும் நான்கு வல்லரசுகளின் அந்நிய ரட்டு மந்திரிகள் மகாநாடு சென்ற சனிக்கிழமை பரிசில் ஆரம்பமாயது.

### யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்ட சீனி, மாத்தறைக்குச் சென்றது!

அரசாங்கத்தார் யாழ்ப்பாணத்துக்கென 130 மூடை சீனி ஓர் புகைரதப் பெட்டியில் யாழ்ப்பாணத்துக்கென அனுப்பினர். ஆனுல் அது யாழ்ப்பாணத்துக்கு வராமல் மாத்தறைக்குச் சென்றுவிட்டதாம்! அந்தப் பெட்டி மீண்டும் கொழும்புக்கு அனுப்பப்பட்டது.

### கட்டுப்பாடு வேண்டுமாம்!

### கடுதாசி நிலைமை மோசமாம்!

அதிகாரிகளின் விளக்கம்

இறக்குமதிக் கட்டுப்பாடு, கடுதாசிக்கட்டுப்பாடு என்பவற்றை நீக்கவேண்டும் என மந்திரசபையினர் தீர்மானித்ததை, கைத்தொழில் வர்த்தக நிருவாகசபை ஆட்சேபித்திருப்பதாகத் தெரிகிறது கடுதாசி நிலைமை சீர்திருந்தவில்லை, நேர்மாருக நிலைமை மோசமாகவிருக்கிறது; இப்படியான நிலைமையில் கடுதாசிக் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டால் கள்ளவிலையிற் கடுதாசி விற்பவரின் கொடுமை அதிகரிக்கும் என்று, கடுதாசிக் கட்டுப்பாட்டதிகாரி வற்புறுத்துவதாகத் தெரிகிறது.

இறக்குமதிக் கட்டுப்பாடு தொடர்ந்து இன்னும் சில காலத்துக்காவது இருக்க வேண்டும் என்று இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரி ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறுர். இப்போது பல உணவுப் பொருள்களை அரசாங்கமே இறக்குமதி செய்து விநியோகம் செய்து வருகிறது. இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்கிவிட்டால், எல்லாரும் அப்பொருள்களை இறக்குமதி செய்து கள்ள விலைக்கு விற்கலாம் என்று இறக்குமதிக் கட்டுப்பாட்டதிகாரி விளக்கியிருக்கிறுர்,

மேலே காட்டப்பட்ட காரணங்களால், மந்திரி சபையினர், தாம் முன் செய்த தீர்மானத்தைப் புநராலோசனை செய்ய வேண்டிய நிலை ஒன்று ஏற்பட்டுவிட்டது.

## கொறியாவுக்குப் பதவி!

### அரசியலில் இருந்து அகற்ற முயற்சி

### லண்டனில் புதுஉத்தியோகம்?

கைத்தொழில்வர்த்தகமந்திரியான மிஸ்ரர் ஜி ஸி. எஸ். கொறியா இங்கிலாந்திலிருந்து வந்துவிட்டார். அவரை அரசியலிலிருந்து அகற்றி, வேறேதாவது பதவி ஒன்றைச் சிருட்டித்து, அதில் அவரை அமர்த்தலாமே என்று சென்ற சிலமாத காலமாக ஆலோசனை நடந்து வந்திருக்கிறது.

லண்டனில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி (ஹை கொமிஷனர்) என்ற ஓர் பதவியைச் சிருட்டித்து, அதற்கு மிஸ்ரர் கொறியாவை அமர்த்த இப்போது மந்திர சபையினர் ஆலோசித்து வருவதாகத்தெரிகிறது.

முன்னர், இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டபோது, மிஸ்ரர் கொறியா அதனை ஆட்சேபித்தார். இப்போதுள்ள நிலையில் அடுத்த பாராளுமன்றத்து மந்திரசபையில் அவர்க்கு ஏதும் மந்திரப் பதவி கிடைக்குமோ என்பது சந்தேகம். எனவே சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி லண்டன் உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ள மிஸ்ரர் கொறியா இப்போது உடன்படுவார் என்று யூகிக்கப்படுகிறது. அப்படியானுல் அவர் ஆகஸ்டு மாதத்தில் மீண்டும் இங்கிலாந்து செல்லக்கூடும்.

## இந்தியர்மீது குரோத மனப்பான்மை!

### "இலங்கை இந்தியரின் செயலால் சிங்களர் பகைமை பாராட்டுகிறுர்கள்!"

### இலங்கைக்குப் பூரண சுதந்திரமாம்! மிஸ்ரர் சேனுயக்காவின் வாய்வீச்சு

இந்தியர் இலட்சக்கணக்கில் இந்த இலங்கையிற் குடியேறி தோட்டக் காடுகளில், சிங்களக் குடியானவர்களுடன் சம அந்தஸ்துக் கேட்பதை நான் ஒருபோதும் அங்கீகரிக்கமாட்டேன். இந்த இலங்கைமீது படையெடுத்து: இதனை வெற்றிகொண்டு அதன்பின்ருன் இந்தியா தனது மக்களை இங்கு குடியேற்றமுடியும். அதற்குமுன்னல்ல" என்று மிஸ்ரர் D.S சேனுயக்கா, உருளிவெளித் தோட்டச் சம்பவ விஷயமாக, அசோசியேற்றட்பிரஸ் நிருபர் ஒருவர்க்குக் கூறினுர். மேலும் அவர் கூறியதாவது:

"இத்தோட்டத்துத் தகராறு விஷயமாக நான் ஒருசிறிதளவாவது விட்டுக் கொடுக்கப்போவதில்லை. ஆனுல் இந்தியாவுடன் நேச பான்மையுடன் இருக்கவே விரும்புகிறேன்.

"இலங்கைத் தோட்டப் பகுதிகளில் இலங்கைக் குடியானவர்களைக் குடியேற்றும் திட்டம் சென்ற 10 ஆண்டு காலமாக இருந்துவருகிறது. வெருட்டியுைல் அல்லது வேலை நிறுத்தஞ் செய்வதால் எம்மைப் பயமுறுத்தித் தம் காரியத்தைச் சாதிக்கமுடியும் என்று இந்தியத்தலைவர்கள் நினைப்பார்களானுல் அது வீண் எண்ணமாக முடியும்.

"இனியும், இலங்கையில் வாழும் இந்தியர் இலங்கையருடன் நேச பான்மையுடன் வாழமுடியுமோ என்பது என்னைப் பொறுத்தவரையில் எனக்குச் சந்தேகம்தான். இலங்கை மக்களுக்குப் பூரணமான சுதந்திரத்தைக் கொடுக்கும் புதிய அரசியலை இந்தியர் எதிர்த்துக் கிளர்ச்சி செய்வதனுல், அவர்கள் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் இழந்துவிட்டனர்."

### சொந்தக்காரரைக் கொன்ற யானை

மத்துகமவில், சென்ற போசன் திருநாளன்று ஊர்வலம் சென்றபோது, ஊர்வலத்திற் சென்ற ஓர் யானை, அருகே சென்ற தனது சொந்தக்காரரைத் துதிக்கையாற் பிடித்து இழுத்துக் காலுக்குக்கீழ் போட்டு மிதித்துக் கொன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், வியஞ
ஆனிமீ சஉ செவ்வாய்க்கிழமை

## இடையூறுகளோடு கூடிய தெருவீதிகள்

கொழும்பு, கண்டி முதலிய பட்டினங்களிலுள்ள பிரசித்த தெருவீதிகளும் ஏனைய தெரு வீதிகளும், அத் தெருக்களால் நடந்தும் வண்டி முதலிய வாகனங்களில் ஏறியுஞ் செல்வோர்க்கு வசதியானவைகளாய், பார்ப்பவர்க்கு அழகானவைகளாய், கிரமமானவைகளாய்க் காணப்படுகின்றன. இந்த யாழ்ப்பாணத்திலுள்ள தெருக்களும் முந்தி அப்படியான நிலைமையிலேயே இருந்தனவென்பது நிசம்.

ஆனல், மேலே சொல்லப்பட்டபட்டினங்களிலுள்ள தெருக்கள் இன்றும் சீரானநிலைமையிலிருப்ப, இந்த யாழ்ப்பாணத்திலுள்ள தெருக்களே இப்பொழுது பெரிதுஞ் சீர்கெட்ட நிலைமையிற் கிடக்கக் காணப்படலாயின; இங்குள்ள தெருவீதிகள் செப்பனிடாமற் கிடப்பதையிட்டு இற்றைக்குச் சில வாரங்கட்கு முன் இப் பத்திரிகையில் எடுத்துக்காட்டினேம்; ஆனல் இப்பொழுது சில தெருக்கள் புதுக்கிச் செப்ப னிடப்படலாயின; எனினும் செப்பனிடத் தொடங்கப்பட்ட தெருக்கள் சில கொத்தித் தோண்டிக் கிளறப்பட்ட பின்னர் வாரக்கணக்கில் எதுஞ் செய்யப்படாமல் அந்த நிலைமையிலேயே விடப்பட்டுள்ளன; இக்காரணத்தினல் மனுஷர்கள் நடந்தேனும், வண்டி முதலியவற்றில் ஏறிக்கொண்டேனும், பொருள்களை ஏற்றிக்கொண்டேனும் எவ்வாற்ருனுஞ் செல்லுதல்முடியாமலிருக்கின்றது; இந்த நிலைமையில் விடப்பட் டிருத்தலைக் காட்டிலுந் தெருவீதிகளை முந்திய சிதைந்த நிலைமையில் விட்டிருத்தல் உத்தமமென்று வழிப்போக்கர் முறையிடுகின்றனர்; இங்ஙனம் தெருக்கள்பாதிவேலை தொடங்கிப் பாதிவேலை முற்றுப்பெருத நிலையில் விடப்பட்டிருத்தலின் நோக்கந்தா னென்னவென்பது இப் பட்டினவாசிகட்குப் புலப்படவில்லை; இதற்கு உதாரணமாக, பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிலடியிலிருந்து சோனக தெருவிற்குச் செல்லும் குறுக்குத் தெருவை இன்றும் எவரும் நேரிற்போய்ப் பார்த்துக்கொள்ளலாம்,

இது தெருக்கள் விஷயத்திற் செய்யப்படும் அக்கிரமங்களிலொன்ருகும் இன்னுமொரு அக்கிரம மென்னவெனின் தெருக்களைச் செப்பமிடுதற்காகிய கற்களைத் தெருவின் மருங்கிற் கொண்டுவந்து கொட்டிக் குவைசெய்து அதிகாரிகள் வருடக் கணக்கில் அப்படியே கிடக்கவிட்டு யாதுஞ் செய்யாமலிருக்கின்ருர்கள்; நாளடைவில் அக்கற்கள் சிதைந்து தெருவிற் பரவுண்டு, வழிப்போக்கராக, வண்டிகள் இரதங்க ளெவைகளாகச் செல்வதற்குக் கஷ்டத்தையே ஆக்கிய வண்ணங் காணப்படுகின்றன; இப்படிச் செய்தலை விடுத்து இக் கற்களை உடனுக்குடன் கொண்டுவந்து கொட்டி வேலை செய்தல் நன்ருயிருக்குமே

இங்குள்ள தெருவீதிகள் சிலவற்றில் நடைபெறும் வேறொரு அக்கிரமமும் அவதானிக்கத்தக்கதாம்; தெரு வோரங்களிலே புதியனவாகக் கடைகள் முதலிய கட்டடங்களைக் கட்டத்தொடங்குவோர், அக்கட்டடத்திற்கு வேண்டிய உபகரணங்களாகிய கல், மணல், சுண்ணும்பு, மரந்தடி யென்னுமிவைகளை அக்கட்டடத்திற்கு முன்னுள்ள தெருவிலேயே கொண்டுவந்து இட்டு வருடக்கணக்கில் வேலை செய்கிருர்கள்; இதனற் பாதித் தெரு கல்லும் மண்ணுங் கொட்டியுங் குவித்தும் வைத்தற்கு இடமாக, எஞ்சிய பாதித் தெருத்தான் வழிப்போக்கருக்கும், வண்டிகளுக்கும் உதவ, இதனல் அத் தெரு மார்க்கமாக எதிரில் வரும் வண்டிகள், இரதங்களை வழிப்போக்கர் விலகிச் செல்லுதல் இயலாதாகின்றது;இதற்குஉதாரணமாக, யாழ்ப்பாணம் வின்ஸர் படமாளிகைக்கும், வெலிங்டன் படமாளிகைக்கு மிடையேயுள்ள தெருவைக் கண்டுகொள்ளலாம்; இப்படியான பல அக்கிரமங்களும், வண்டிகள், வழிப்போக்கர்கட்கு இடையூறுமிருத்தலால், இப் பட்டினத்திற்குரிய பகிரங்கவேலைப்பகுதி மேற்பார்வை உத்தியோகத்தர் இச் சீர்கேடுகளையெல்லாம் அவதானித்து உடனுக்குடன் நீக்கித் தெருவீதிகளை,முன்னர் எடுத்துக் காட்டப்பட்ட கொழும்பு, கண்டி முதலியநகரங்களின்நிலைமையில் வைத்தல் வேண்டு மென்பதே இப்பட்டின வாசிகளின் வேண்டுகோளாகும்,

## துணிகள் விலை குறையும்!

### வர்த்தகர் நேரே இறக்குமதி செய்ய ஏற்பாடு!

இதுகாறும் துணிகளை இலங்கை அரசாங்கமே இறக்குமதி செய்து விநியோகித்தது. இதனல் துணிகளின் விலை உயர்ந்திருந்தது. இனி அமெரிக்காவில் இருந்து பருத்தித் துணிகளை நேரே இறக்குமதி செய்ய வர்த்தகர்க்கு அரசாங்கம் அநுமதி யளித்திருக்கிறது. இதன் பயனக இனித் துணிகளின் விலை குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## இலங்கைக்கு நல்ல காலமாம்!

சுகவீனம்காரணமாக இங்கிலாந்து சென்று சிகிச்சை பெற்ற இலங்கைத் தொழில் மந்திரி மிஸ்ரர் ஜீ ஸீ. எஸ். கொறியா சென்ற வெள்ளிக்கிழமை கொழும்புக்கு மீண்டுவிட்டார். உலகின் நிலை இன்னும் சீராகவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இலங்கையானது தன் கைத்தொழில்களை விருத்தி செய்யுமானல், இந்நாட்டுக்கு நல்ல காலம் [illegible] என்று ஓர் பத்திரிகை [illegible] கொறியா கூறினர்.

# படிப்பிக்கவேண்டும்

## கோடரிக் காம்பு போன்ற தமிழ்ப்பிரதிநிதிகள் அவர்கள் செய்த கபட நாடகம்

### ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் முழக்கம்

(நமது நிருபர்)

"நீதியும் நியாயமும் எம்பக்கம் தான் இருந்தன. எனவே நாம் கொண்டுள்ளலட்சியம் வெற்றியடைந்திருக்கவேண்டும். ஆனல் கோடரிக் காம்பு அனைய சில தமிழ்ப் பிரதிநிதிகள் தாம் கொடுத்த வாக்குறுதியைப் புறக்கணித்து, தம்மைத் தெரிந்தனுப்பிய பொதுமக்களை ஏமாற்றித் தமிழ்ச்சமூகத்துக்கே துரோகம் செய்தபடியால் நாம் எமது லட்சியத்தைப் அடையவில்லை" என்று சென்றவியாழக்கிழமை அல்வாயில் நிகழ்ந்த ஓர் பொதுக் கூட்டத்தில் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம் கூறினர்.

வரப்போகும் பாராளுமன்றத் தேர்தலில், தமிழர் மகாநாட்டுக் கொள்கைகள் என்ன என்பதை விளக்குதற்காகவே இக் கூட்டம் கூட்டப்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்திற்குச் சமூகமாயிருந்தனர். ஸ்ரீ பொன்னம்பலம் மேலும் கூறியதாவது.

"நீங்கள் ஆயிரக்கணக்கில் குழுமி எனக்கு இன்று உபசரணை செய்தீர்கள். இந்த மரியாதை எனக்கல்ல; நான் கொண்ட லட்சியத்திற்கென்றே நினைக்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ்மக்கள் செயற்பாலது யாது? அகில இலங்கைத் தமிழர் மகாநாட்டுக் கொடியின்கீழ் நாம் எல்லாரும் ஒன்று சேரவேண்டும்.

"நாம் எமக்குள்ளே பூரண ஒற்றுமை யுடையவர்களாக விருத்தல் வேண்டும் சிங்கள சமூகத்தில் முன்னேற்ற நோக்குடையவர்களுடன் ஒத்துழைக்க வேண்டும்.

"கடைசியாய், எங்கள் பகைவர் யார் என்பதை நாம் இப்போது நல்லாய் அறிந்துகொண்டோம். எங்கள் வாக்குச் சம்மதத்தைப் பெற்று, எங்கள் ஆதரவினல் அரசாங்கசபைக்குச் சென்று, பின் "தான் இருந்த கோடு குறைத்துவிடல்" என்ருங்கு எங்களுக்கே பெருந் துரோகம் செய்த அவர்கள் இனியும் அபேட்சகராக வருவாரானல், அவர்களுக்குத் தக்க பாடம் கற்பிப்பது எங்கள் பெருங் கடமையாகும்"

# சேரவில்லையாம்!

## செனநாயக்கா-சமதர் மிகள் உறவு

### டக்ரர் விக்கிரமசிங்காவின் விளக்கம்

இலங்கைச் சமதர்மக் கட்சியும் மிஸ்ரர் செனநாயக்காவின் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேரத் தீர்மானித்துவிட்டதௌ ஓர்செய்திஇப்பத்திரிகையில் வெளிவந்தது ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து ஒத்துழைப்பது, சமதர்மக் கட்சியின் கொள்கைக்கு முற்றிலும் மாறானது என்றும், தாம் ஒருபோதும் மிஸ்ரர் செனநாயக்காவின் கட்சியில் சேரப்போவது இல்லை என்றும் இலங்கைச் சமதர்மக் கட்சித் தலைவராகிய டக்ரர் எஸ். ஏ விக்கிரமசிங்கா அறிவிக்கிருர்.

## காலத்திற் செய்த உதவி

### இந்தியாவின் தாராள மனப்பான்மை

இலங்கைக்கு அவசரமாக உணவு உதவி

இலங்கைக்கு 5000 தொன் உணவுப்பொருள் அளிக்கவேண்டும்என்று இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ சௌமியமூர்த்தித்தொண்டமான் இந்திய அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுத்தாரல்லவா? அதற்கு இந்தியாவிடம் இருந்து கிடைத்த பதிலில் தனக்கு வந்த உணவுக் சப்ளை இலங்கைக்கு அவசரமாக இரவல் முறையில் அனுப்பியுள்ளதாயும், இந்தியாவின் இப்போதைய நிலையில் அதிகமாகச் செய்ய முடியவில்லை என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# "கால் அடியிற் கிடக்கும் இலங்கை"

## இந்தியா ஒருகணத்தில் தீர்த்துவைக்கமுடியும்

### உருளிவெளி விஷயமாய் இந்திய அதிகாரி விளக்கம்

இந்தியத் தொழிலாளரை உருளிவெளித் தோட்டத்தில் இருந்து அகற்றச் செய்யும் முயற்சியைக் கண்டிக்கும் பொருட்டு களனிவேலிப் பகுதியில் உள்ள இந்தியத் தோட்டத்தொழிலாளர் சென்ற 12ம் திகதி தொடக்கம் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர். உருளிவெளி அநீதியும் அதைப்போன்ற அநீதியும்இனிநடக்காதென்றுமுடிவு ஏற்படும்வரை எதுவரினும் போர் நடந்தே தீரும் என்று இலங்கை இந்தியக் காங்கிரஸ் கங்கணம் கட்டி நிற்கிறது. 5000 சிங்களத் தொழிலாளரும் இந்தியத் தொழிலாளருடன் ஒற்றுமை பூண்டு வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர்என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது இதுவரை களனிவலிப் பகுதியில் 35000 தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இன்னும் பல இடங்களில் வேலை நிறுத்தம் ஆரம்பமானல் 2 லட்சம் தொழிலாளர் ஈடுபடுவர் என்று தெரிகிறது.

உருளிவெளிச் சம்பவம் விஷயமாக இந்திய அரசாங்கம், நிலைமையை வெகுவாக அவதானித்து வருகிறது என்று இந்திய அரசாங்கத்தின் சாம்ராஜ்ய உறவு அதிகாரியான டக்ரர் N. B. காரே கூறுகிருர். அவர் இவ்விஷயமாகக் கூறியதாவது:

"உருளிவெளித் தோட்டத்தி லிருந்து இந்தியர் வெளியேற்றப்பட்டால் என்ன என்ன தீங்குகள் ஏற்படும் என்பதை இந்திய அரசினர் நன்ருக உணர்ந்திருக்கிருர்கள். "இந்தியர்கள் விஷயத்தில் இலங்கை, தென்னுபிரிக்காப் பிரதம மந்திரி ஸ்மற்ஸ் செய்யும் அநீதியிலும் பார்க்கக் கொடிய அநீதியை விளைக்க முயற்சிக்கிறது"

தென்னுபிரிக்கா விஷயமாக இந்திய அரசாங்கம் எடுத்துக்கொண்ட அதே நடவடிக்கை இலங்கை விஷயத்திலும் கைக்கொள்ளப்படுமா என்று கேட்டதற்கு "அவ்வித நடவடிக்கை அவசியமிராது. இலங்கை ஒரு சிறிய தீவு. அது இந்தியாவின் காலடியில் இருக்கிறது. சுதந்திர இந்தியா இந்த அற்ப விஷயத்தை ஓர் கணத்தில் தீர்த்துவைக்க முடியும்" என்று பதிலிறுத்தார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரத சுதந்திர அங்குரார்ப்பணம்

## இந்திய தேசீய ராணுவ ஆரம்பம்

### கிழக்குத் திசையில் இந்தியர் விழிப்பு
### பட்சபாதக முறையால் வந்த அநர்த்தம்

(—:—:—)

### பழிக்குப் பழிவாங்கப் பேராவல்

[சுத்தியேந்தி இரத்தம் சிந்தி யுத்தம் புரிந்தனர் இந்திய தேசீய ராணுவ விரர்: இந்திய சரித்தரத்தையே மாற்றினர்: அவர்கள் ஆற்றிய வீரச் செயல்களினுல், இன்று பாரதநாடு சுதந்திரப் பாதையை நோக்கி வெகுதூரம் முன்னேறிப் போய்க்கோண்டிருக்கிறது இத்தரைய இந்திய தேசீய ராணுவம் ஏற்பட்ட விதம், வளர்ச்சி யடைடந்த தன்மை, அது ஆற்றிய வீரத்தியாகங்கள் என்னும் இன்னோரன்னவற்றை இததோடர்ச்சிக் கட்டுரைகள் மூலம் விளக்குகிருர், அந்த ராணுவத்தைச் சேர்ந்தவீரன் கொச்சினி நாயா அவர்கள் தோகுத்தவர் 'ஸ்ரீதரன்']

1885-ம் ஆண்டில் இந்திய தேசிய காங்கிரஸ் தாபிக்கப்பட்டது. பாரத மக்களைப் பந்தித்து வந்த தளைகளை அறுத்தெரிய ஆரம்பிக்கப்பட்ட காங்கிரஸ் அன்றுதொட்டு இன்றுவரை சாதித்துவந்த காரியங்கள் அனைவரும் அறிந்ததே 60 ஆண்டு காலமாக ஆரியநாட்டு மக்கள் அடைந்த கஷ்டங்களும் அவர்களுக்கு விளைந்த நஷ்டங்களும், அம்மம்ம! இவ்வளவு அவ்வளவு அல்ல. ஆனுல், அன்றுதொட்டின்றுவரை நடந்த சுதந்திரக் கிளர்ச்சிகளில் முக்கியத்துவம் வாய்ந்தது இந்திய தேசிய ராணுவத்தால் ஏற்படுத்தப்பட்டதே என்பதை எவரும் மறுக்கமுடியாது. "ஆயிரமுண்டிங்கு சாதி, ஆனுல் அந்நியர் வந்து புகலென்னநீதி" என்ற கோஷத்தைக் கிளப்பியது இந்திய தேசியராணுவம். பாரதநாட்டு மக்கள் எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் ஜாதி, எல்லாரும் பாரததேவியின் மணியுதரத்துதித்தபுதல்வர்களென்பதை பாரதவீரர் இந்தியதேசிய ராணுவமூலம் உலகிற்குக் காட்டினர். அப்படியாக வெற்றியெட்டுத்திக்கு பெட்டக் கொட்டிய வீர மணிகளைக் கொண்ட இந்திய தேசிய ராணுவத்தின் உற்பத்தி, அதன் வளர்ச்சி என்பவற்றைப்பற்றி ஆராய்தலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### தேசீய விழிப்பு

இந்தியஅரசியலில் மகாத்மாகாந்தி பங்குபற்றிய நாள்தொடக்கம், இந்தியாவுக்கு வெளியே கிழக்கு ஆசியாவில் வாழ்ந்துவரும் இந்திய மக்கள் தேசிய விஷயங்களில் ஆர்வம்கொண்டு வந்தனர். இந்திய காங்கிரசின்கிளை ஒன்று பன்னெடுங் காலமாகப்பர்மா நாட்டில் இருந்துவந்தது. பர்மா இந்தியாவினின்றும் பிரிக்கப்பட்ட பிறகும் அங்குள்ள இந்தியர் "எம் தாய் நாட்டுக்கு எப்போது சுதந்திரம் வரும், எப்போது எம் பாரததேவி சுதந்திரதேவியாக மிளிர்வாள்" என்று அங்கலாய்ந்துக்கொண்டே யிருந்துவந்தனர். இப்படியிருக்க, கிழ்க் கோடியில் ஜப்பானியர்க்கும் பிரிட்டிஷார்க்கும் யுத்தம் மூண்டது. பர்மாவை ஜப்பானியர் தாக்கினர். அந்தக் காலத்திலே யுத்தகளமாகிய பர்மாவில் இருந்து ஜனங்களை அப்புறப்படுத்துவதில் பிரிட்டிஷார் மிகவும் கேவலமான முறையில் நடந்தனர் யுத்தபூமியை விட்டு அப்புறப்படுத்தும் விஷயத்தில் இந்தியர் கேவலமான முறையில் பட்சபாதகமாக நடத்தப்பட்டனர். இந்தக் கேவல மனப்பான்மையினுல் 5 லட்சம் இந்தியரில் 1 லட்சம் பேர் அநியாயமாக மடிய நேரிட்டது நம்பியிருந்த எங்களை நட்டாற்றில் விட்டனரே என்று பர்மாவில் உள்ள இந்திய மக்கள் பிரிட்டிஷார்மீது முன்னெருபோது மில்லாதவாறு வெறுப்புக் கொள்ளத் தொடங்கினர்.

### மலேயாவில் அதிருப்தி

பர்மாவில் இந்தியர் நிலைமை இவ்வாறுக, மலாய்நாட்டிலும் இந்தியர்க்கென ஓர் அரசியற் சபை இருந்தது. அதன் பெயர் மத்திய இந்திய சங்கம். 1937-ம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அங்கு விஜயம் செய்ததிலிருந்து, மலாய்நாட்டில் இந்திய தேசிய இயக்கம் நாளொருவண்ணம் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து வந்தது. 1939-ம் ஆண்டு நிகழ்ந்த கிளாங் தொழிலாளர் வேலைநிறுத்தம் ஒன்றே இந்திய மக்களின் உறுதிக்குப் போதிய சான்றாகும்; இன்னும் மலாய் நாட்டில் வதிந்த இந்திய மக்கள் கல்வியறிவின் மிக்கார்; விஷயங்களை ஆராய்ந்தறியும் வன்மையுடையார். ஐரோப்பியராயினுமாகுக, ஆசியாக்காராயினுமாகுக, தங்களைக் கேவலமாக நடாத்துவதை அங்கிருந்த இந்திய மக்கள் சகியார். அத்தகைய சுயமரியாதையும, சுதந்திராபிமானமும் உடையர். சமய சந்தர்ப்பம் வாய்க்குங்கால் ஏறுகொண் டெழுந்து அன்னை பாரததேவியின் மானத்தைக் காப்பாற்ற ஆயத்தமாகவே மலாய்நாடு வாழ் இந்தியர் தயாராக இருந்தனர். அப்படியான ஓர் நிலையில்தான் யுத்தம் ஆரம்பமாயது. இது இந்தியர்க்குப் பெரும் விழிப்பைக் கொடுத்தது. சாதாரண இந்திய பிரஜைகளுக்கும், இந்திய சிப்பாய்களுக்கும் இந்த யுத்தம் ஓர் பெரிய புரட்சிகரமான மாறுதலைத் செய்தது. தூர கிழக்குப் பிராந்தியங்களுக்குப் படைகள் எவ்வளவுக்குக் கொண்டுவந்து குவிக்கப்பட்டனவோ, அவ்வளவுக்குத்தக்கதாக மக்களின் சாதாரண உரிமைகள் யாவும் படிப்படியாகப் பறிமுதலாயின. இந்தியாவிலே இராணுவத்தினர்க்கும் ஊரவர்க்குமிடையேயுள்ள தொடர்பு யாவரும் அறிந்ததே. ஊரவர்கள் இராணுவத்தினரைச் சந்தேகத்துடனும் அருவருப்புடனும் ஒதுக்கிநடக்கிருர்கள். இதே மாதிரித்தான் மலாய்நாட்டிலும். கிளாங்கில் நிகழ்ந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை அடக்க இராணுவத்தை உபயோகித்ததிலிருந்து இந்தியர்க்கும் அரசாங்கத்துக்கு மிடையே பரஸ்பர வெறுப்பு அதிகரித்து வந்தது. இந்தியர் மிகவும் ஆத்திரத்துடனிருந்தனர். அப்படியான சந்தர்ப்பத்தில்தான் 1941-ம் ஆண்டு டிசெம்பர்மீ 8-ம் திகதி கிழக்கு ஆசியாவில் யுத்தம் மூண்டது, யுத்தபூமியிலிருந்து தாய்நாடு திரும்ப விரும்பிய இந்தியர்க்கு வசதிகள் செய்யப்படவில்லை. நிறத்திமிர் தாண்டவமாடியது. ஐரோப்பியரை வெளியேற்றிவிட்டுத்தான் மற்றவர்களை வெளியேற்ற முடியும் என்று பகிரங்கமாகக் கூறப்பட்டது. கறுத்தவர்க்குஓர்நீதி, வெள்ளையர்க்கு இன்னோர் நீதி! இதனுல் ஆளுவோர்மீது இந்தியப் பிரஜைகளுக்கு வெறுப்பும் அருவருப்பும் பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்ற எண்ணமும் வளர்ந்து, சமயசந்தர்ப்பத்தை நோக்கியிருந்தனர்.

### ராணுவத்தில் அதிர்ச்சி

இந்தியச் சிப்பாய்கள் ஒன்றும் தெரியாத அப்பாவிகள் என பிரிட்டிஷ் அதிகாரபீடம் நினைத்திருந்தது. ஆனுல் எமது இந்தியச் சிப்பாய்கள் அவ்வளவு கோழைகளாக இருக்கவில்லை அவர்களுக்கிடையே அதிருப்தியும் அமைதியின்மையும் நிலவின. தமது அடிமைத்தளையை அறுத்தெறிய அவர்களின் மனம் துடிதுடித்துக் கொண்டிருந்தது இந்தியஇராணுவத்திலேயுள்ள இந்திய சிப்பாய்களுக்கும், ஆங்கில, ஆஸ்திரேலிய சிப்பாய்களுக்குமிடையே பெரும் வித்தியாசமுண்டு. சம்பளம், பிரயாணச்செலவு, உபகாரப்பணம் என்பவற்றிற் பெரும் வித்தியாசங்களுண்டு. "நானும் ஓர் யுத்தவீரன்தான்: இந்தியாவிற் பிறந்த குற்றத்துக்காக, நான் ஓர் வெள்ளைக்காரனிலும் பார்க்கக் கேவலமாக நடத்தப்படவேண்டுமா?" என்ற எண்ணம் இந்திய சிப்பாயின் மனத்தில் உதித்தது.

### இந்தியச் சிப்பாயின் வெறுப்பு

நான் ஓர் மனுஷன்: கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டவன்: அப்படிப்பட்ட என்னைப் பட்சபாதமாக ஏன் நடத்தவேண்டும்? என்று ஒவ்வொரு சாதாரண சிப்பாயும் தன்னைக்கேட்டு நொந்து கொள்ளுவான். படிப்படியாக அவனுக்குத் தனது ஆங்கில எஜமானர்மீது வெறுப்பும் குரோதமும் ஏற்படலாயிற்று. ஓர் இந்தியப் படை பிரிட்டிஷார்க்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தது; அல்லது தனது இந்திய இராணுவ உத்தியோகத்தரைப் பிரிட்டிஷ்இராணுவஉத்தியோகத்தனிலும் பார்க்கக் கேவலமாக பிரிட்டிஷார் நடாத்தியதற்காக ஓர் இந்தியப் பட்டாளம் பம்பாயை விட்டுக் கப்பலிற் புறப்பட மறுத்தது; அதன்பயனுக அந்த இந்தியச் சிப்பாய்கள் நிராயுதராக்கப்பட்டுச் சிறைப்பட்டனர்; ஹைதராபாத் பட்டாளத்தைச் சேர்ந்த ஸஹீருதீன் என்ற லெப்ரினற், மலாய்நாட்டில் இருந்தபோது, தன்னை அகௌரவப்படுத்திய பிரிட்டிஷ் சேனுதிபதிக்கு எதிர் கூறி அவர் வாயை அடக்கியதற்காக உத்தியோகம் இழந்து, அவமானப்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

### ஆஸ்திரேலியாவிலிருந்து செயற்கைப்பட்டு

ஆஸ்திரேலியாவிலிருந்து ஓர்தொகைச் செயற்கைப் பட்டுத் துணிகள இலங்கையில் இலக்குமதியாக இருக்கின்றன, இச்செயற்கைப்பட்டு மலிவானது, பெலமானது. இதன் இறக்குமதியால்; இப்போதுள்ள துணி நெருக்கடி ஓரளவுக்குக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### இன்னேர்' புதிய கட்சி

லங்கா சுயராஜ்பக் கட்சி என்ற ஓர் அரசியற் கட்சி சென்றவாரம் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

### நல்ல சகுனமில்லை!

### போஸன் உற்சவத்தில் சந்திரகிரகணம்

#### பௌத்த சமயிகட்குக் கூடாத காலமாம்

சென்ற 14-ந் திகதி யிரவு நிகழ்ந்த சந்திரகிரகணம் பௌத்த மதத்தினர்க்குப் புனிதமாகிய 'போஸன்' தினத்தன்று நிகழ்ந்திருக்கின்றது இது ஓர் துர்ச்சகுனம் என்றும், நிகழப்போகும் கெடுதிகளுக்கு இது உற்பாதமாக விருக்கலாம் என்றும், விசேஷமாகப் பௌத்த மதத்தினர்க்குத் திங்குகள் நேரலாம் என்றும், மிஸ்ரர் கிளிப்போட் பெரீரா என்னும் சிங்கள ஜோசியர் கூறுகிருர். "என்னுடைய கணிப்புப்படி இந்த ஆண்டின் இறுதியிற் பிரபல பௌத்த தலைவர்கள் தேகவியோக மடையவும் கூடும்" என்று அவர் கூறினர்.

## கழுதை! நரி! நாய்!

### அபேட்சகராய் வருவோர்க்கு அடையாளம்
### அப்படிச்செய்வது அன்னுர்க்கு அகௌரவம்!

#### அரசாங்கசபையில் சட்டநிபுணர் விளக்கம்

தற்போதுள்ள வர்ணப் பெட்டி முறையை ஒழித்து, தேர்தற்காரலங்களில் அபேட்சகர்களின் பெயர்க்கெதிரே சிலுவைஅடையாளம் போடும் முறையைத் தொன்மைபோல் அநுட்டிக்கவேண்டும் என மந்திரி சபையினர் தீர்மானித்தார்க ளல்லவா? அதனை ஆட்சேபித்து மாத்தளைப் பிரதிநிதியான மிஸ்ரர் அலுவிகாரை சென்ற புதன்கிழமை அரசாங்க சபையில் ஓர் தீர்மானம் கொண்டு வந்தார்.

தமது தீர்மானத்தைப் பற்றிப் பேசும்போது மிஸ்ரர் அலுவிகாரை இப்போதுள்ள முறையில் கல்விவாசனையற்றவர்கள் தானும் தாம் விரும்பிய அபேட்சகர்க்கு, வர்ணத்தைக் கொண்டு தம் வாக்குச் சம்மதத்தைக் கொடுக்க முடியுமென்றும், இனி அனுஷ்டிக்கப் படும் முறையினுல், கல்வியறிவற்றவர்கள், தேர்தல் இடத்தில் தலைமை வகிக்கும் அதிகாரியிடம் சென்று அவரைக்கொண்டு அடையாளம் இடுவிக்கவேண்டு மாதலால், இது வாக்காளர் உரிமைகளைப் பங்கப்படுத்துவதாக முடியும் என்றும் கூறினுர். வர்ணப் பெட்டி முறையினுல் ஊழல்கள் நிகழ்ந்தால் வேறு முறைகளைக் கையாளலாம்: இந்தியாவில் அபேட்சகராக வருவோர் தமக்கென ஒவ்வோர் சின்னங்களை வைத்திருப்பர் உதாரணமாகஒருவர் கழுதையையும், வேறொருவர் நரியையும், இன்னொருவர் நாயையும், அடையாளமாக வைத்திருப்பர். வாக்குச்சீட்டுக்களில் அந்தந்த அபேட்சகர்களின் பெயர்க்கெதிரே அந்த அந்த மிருகங்களின் படம் தீட்டப்பட்டிருக்கும். வாக்காளர் தமக்கு விருப்பமான அபேட்சகர்களுக்குரிய மிருகத்தில் அடையாளமிட்டு வாக்குப் பெட்டியில் போடமுடியும். இது மிகவும் சுலபம் என்று மிஸ்ரர் அலுவிகாரை மேலும் குறிப்பிட்டார்.

அபேட்சகராகவரும் பிரமுகர்களுக்கு ஒவ்வோர் மிருகத்தின் அடையாளத்தைக் கொடுத்து, 'அவர்களை நாய், நரி, கழுதை,' மூசலாக்குதல் அவர்களின் கௌரவத்துக்கே பங்கம் விளைக்க ஏதுவாகும் எனத் தாம் நம்புவதாகச்சட்டக்காரியதரிசி பதிலிறுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரத சுதந்திர அங்குரார்ப்பணம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

பட்டு இந்தியாவிற்குத் திருப்பி அழைத்துச் செல்லப்பட்டார்; என்ற இன்னோரன்ன கதைகளையும் சம்பவங்களையும் கேள்விப்படும் சாதாரண இந்தியச் சிப்பாய் புளகாங்கிதமடைந்தான். எனது "இந்திய சகோதரரான சிப்பாய்கள்" என்று அவன் இறும்பூதெய்தினான்; பெருமிதமடைந்தான். பிரிட்டிஷாரை இந்தியர் எதிர்க்கும் ஒவ்வொரு செயலும் இந்தச் சாதாரண சிப்பாய்க்குப் பரமானந்தத்தை அளித்தது. இந்திய அதிகாரிகளை வணக்கம் செய்ய பிரிட்டிஷ் சிப்பாய்கள் மறுத்தது அங்கே சர்வ சாதாரணம். அதுமாத்திரமா?

### பிரிட்டிஷார் செய்த செயல்கள்

இந்தியச் சிப்பாய்களை, வெள்ளைக்கார அதிகாரியின் கேவலவேலைகளுக்கும்உபயோகித்துவந்தனர். கேவல சாதாரண பிரிட்டிஷ் சிப்பாய்களுக்கு ஊழியஞ் செய்யவும் இந்தியர் கற்பிக்கப்பட்டனர். ஜப்பானிய யுத்தம் மூண்டதும் இந்தியச் சிப்பாய்களும் ஆஸ்திரேலியச் சிப்பாய்களுமே யுத்த முன்னணிக்குப் போக பிரிட்டிஷ் சிப்பாய்கள் பின்னுக்கு நின்று அபாயகரமில்லாத தொழில்களைப் புரிந்தனர். மலாய் யுத்தம் முடியும் காலத்தில், தக்க ஆகாயப்படை உதவியின்றி, முன்னுக்குப்போக ஆஸ்திரேலியர் மறுத்தனர். ஆனல் பாவம், இந்தியச் சிப்பாய் மறுக்கவோ ஆட்சேபிக்கவோ முடியவில்லை. மலாய் நாட்டிலிருந்து ஊரவர்கள் வெளியேற்றப்படும்போது, இந்தியராயுள்ள பொதுஜனங்களை வெளியேற்றவோ, அவர்களுக்கு எதும் உதவி செய்யவோ அதிகாரிகள் முன்வரவில்லை. சிங்கப்பூர் யத்தம் முடியப்போகும் காலத்தில், அரண்களில் பாதுகாப்புக்காக ஒதுங்கியிருந்த இந்தியச் சிப்பாய்களைப் பிரிட்டிஷார் வெளியே துரத்திவிட்டுக், தாமே அப்பாதுகாப்பு அரண்களில் பதுங்கியிருந்தனர். வெளியே துரத்தப்பட்ட இந்தியப் படைகள் ஜப்பானியரின் வெடிகுண்டுகளுக்கும் துப்பாக்கிகளுக்கும் இரையாகி இறந்தனர். இப்படியான சம்பவங்கள் இந்திய சிப்பாய்கள் மனத்திற் புகுந்து அவர்களின் உள்ளத்தைக் கொதிக்கச் செய்தன. பழிக்குப்பழி! உயிருக்கு உயிர்! வாங்கவேண்டுமென்ற எண்ணம் இந்திய சிப்பாய்களிடையே கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது கிழக்கிலுஞ்சரி, மேற்கிலுஞ்சரி, மத்திய பகுதியிலுஞ்சரி, பிரிட்டிஷார்பெறும் ஒவ்வொரு தோல்வியும் இந்தியச் சிப்பாய்க்குப் பேரானந்தத்தை அளித்தது. இவர்களுக்கு வேண்டும், இன்னமும் வேண்டும் என இந்தியச் சிப்பாய்கள் திருப்தியடைந்தனர். பிரிட்டிஷார் என்றால், மகாபராக்கிரமசாலிகள், அவர்கள் மேதாவிகளென்றெல்லாம் இந்தியச் சிப்பாய்கள் எண்ணியிருந்ததெல்லாம், நடந்த சம்பவங்களால் அவலமாயிற்று இந்தியர் கண்விழித்தனர்; சுற்றி நோக்கினர் நிலைமையை அவதானித்தனர். எது வந்தாலும் இனி அடிமைவாழ்வு நாடோம் எனப் பிரதிக்கனை செய்தனர்.

(வரும்)

USE PARENTS USE

GRIPE-VIT-D

FOR BABIES

S. R. REMEDIES, TRICHY.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்:

**மொடேண் ஏஜென்சீஸ்,**

சிலாபம். (இலங்கை)

(Mis 185. 31—31-12-46)

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி **8** லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பண ரூபா

**134,3670**

**100** ரூபா விகிதமான **8000** பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 12 20-11-45—20-11-46 (தி)

வெற்றியைப் பின்தொடர்ந்து இதோ வந்துவிட்டோம்

## அஜ்மீர் ஜெனரல் அஷ்யூரன்ஸ்

### வீமாக்கொம்பனி லிமிற்றெட்

ஸ்தாபிதம் 1907

எமது அதிசய சேவையின் அற்புதவெற்றி

| | | |
|---|---|---|
| இப்போதுள்ள பொலிசிகள் ரூபா | 700,00,000—00 | மேற்பட்டது |
| இதுவரை கொடுபட்டதொகை ரூ. | 113,00,000—00 | ,, |
| இப்போதைய இருப்பு ரூபா | 170,00,000—00 | ,, |
| 1944ம் ஆ. வருஷாந்த வருமானம் | 39,45,103—00 | ,, |

ஆயுள், அக்கினி, தொழிலாளர் நஷ்டஈடு, விபத்து
முதலியவற்றிற்கு இன்ஷூர் செய்யப்படும்

எவருக்கும் தகுதியான குறைந்த கட்டணப் பணம் உடையது

இலங்கையில் சகலபாகங்களிலும் ஏஜெனஸ் தேவை

நல்ல சம்பளமும் உத்தியோக நிலைபரமும் கோடுக்கப்படும்

விபரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்

கிளைக் காரியதரிசி, **டொன் கரலிஸ் கட்டிடம்,**
91, முதலாம் குறுக்குத்தெரு,
புறக்கோட்டை, கொழும்பு

Mis 154 29-11-45—30-11(தி)

## காணிக்குத்தகை ஏலவிற்பனவு

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை மேற்பார்வையில் உள்ள ஸ்ரீமதி புண்ணியநாச்சி மடதருமத்தைச் சேர்ந்த தென்மராட்சிப்பகுதி மறவன்புலவு நாவற்குழி கோயிலாக்கண்டி இறைகளில் இருக்கும் நெல்வயல் பனை அடைப்பு ஆதியவற்றின் குத்தகை அவ்வக் காணிகளிலிருந்து 1946-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் சபையின் உத்தியோகத்தர்களால் ஏலத்தில் விற்கப்படும். குத்தகை வாங்க விரும்புவோர் முறபணங் கட்டல் வேண்டும். குத்தகை மூன்று வருடத்துக்கு மேற்படாத காலத்துக்கு எழுதப்படும் எல்லாக் காணிகளையும் ஒருமித்தும் அல்லது பாகங்களாகவும் குத்தகைக்குக் கொடுக்கப்படும். காணிகளின் பெயரகளையும் பரப்பையும் வேறு விபரங்களையும் அறிய விரும்புவோர் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைத் தலைவர், வழக்கறிஞர் திரு. இ. சிவகுருநாதர் அவர்களிடம் அறிந்து கொள்ளலாம்.

இ. சிவகுருநாதர்
தலைவர்

யாழ்ப்பாணம். 10—6—46.

Mis 82 11-6 46—21-6-46

## பகிரங்க அறிவித்தல்

ஐயன்மீர்!

எனது ஆட்சியும் சொந்தமுமான நீர்வேலி இறை வடுவாவுடை நெ. ப. 15 ஐ (கிழக்கு கதிர்காமர் கார்த்திகேசுவுக்கும், தெற்கு விதைபா நிலமும், மேற்கு கதிர்காமர்கந்தையாவுக்கும், வடக்குசீனியர்கந்தையாவுக்கும் அம்மன் கோவிற்குமுரிய ஆதனங்களை எல்லையாகவுடைய ஆதனத்தைச்) சிலர் கள்ளச் சாதனம் செய்து வைத்திருப்பதாக அறிகிறேன். ஆதலின் இவ்வாதனத்தைப்பற்றிய சகல உரிமைகளும் எனக்கே உண்டென்பதைக் கற்பித்துக்கொள்கிறேன்.

இங்ஙனம்

P. சின்னையா - நடராசா

நீர்வேலி தெற்கு. 20—5—46

Mis 51 - 24-5—23-6-46

## பசந்த லேகியம்

இதனல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிப்பால் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறாத்தல் விலை ரூபா 25
அரைறாத்தலுக்கு ரூபா 12-50
கால்றாத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Mis 25 23-4-46 to 22-3-47)

## தந்தரோகசஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

### சந்தனுதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ. 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது ஆடினபல்லு உடனே இறுகும், முரசு வளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப் பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.
சீசா மூலிய செலவு வேறு:

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை.

வல்லை நரசிங்க வைரவாலயத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

Mis 27 26-4-46—25-10-46

## பேர்பெற்ற பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகள்

உலகப் பிரசித்திபெற்ற, திறமானவையும், நன்மதிப்பு உள்ளவையும், பேசல் மிஷன் கலிக்கற் ஓடுகளே. மிகக் குறைந்த தண்ணீரை உறுஞ்சுவன. கடைகளில் விலைப்படும் பலதினிசு ஓடுகளையும் நிறுத்துப்பார்த்துத் தண்ணீருள் நனையவிட்டுபின்னும் நிறுத்து எது கூடிய தண்ணீரை இழுக்குமெனப் பரிசோதித்துப் பாருங்கள். தற்கால நிலைமைக்கும். தேவைகளுக்கும் ஏற்ற ஒரு புதுமாதிரி இவ்வோடுகள் செருகு விழிம்பும், இரட்டைப் பீலியும் உள்ளனவாய்ச் செம்மைபட்டு இக்காலத்தில் அதிகமாய் உபயோகிக்கப்படுகின்றன. கீழைத்தேசத்தில் விலைப்படும் ஓடுகளுள் இவைகளே முதன்மை பெற்றன. வாங்கத் தீர்மானிக்குமுன் இவ்வோடுகளை ஒருதரம் பாருங்கள், கவனியுங்கள். மற்றைய ஓடுகளில் ஏமாந்து நட்டப்படாதீர்கள்.

வேறு சாதி ஓடுகளைப்போல வழக்கமான தனிப் பீலி ஓடும்
இங்கே பெற்றுக்கொள்ளலாம்.

வில்லியம் மேதர் அன்சன்ஸ், தனி ஏசன்ட்

1888-ம் ஆண்டு முதல்.

Misc, 250—19-3-46—19-9-46) (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அரசியல்

### காங்கிரஸ் நிராகரித்துவிட்டது

தற்போது அமைக்கப்படவிருக்கும் முறையில், மந்திரிகள் அமைத்துள்ள அரசியற் றிட்டத்தையும் தற்காலிக அரசாங்க முறையையும் அகில இந்தியக் காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. காங்கிரசுடன், முஸ்லிம்லீக் சமபலம்கோரி வற்புறுத்தியபடியினாலேயே, தற்காலிக அரசாங்கத் திட்டத்தைக் காங்கிரஸ் நிராகரித்துவிட்டது. ஓர் சில நிபனைகளுடன் முஸ்லிம்லீக்கும், சமஸ்தானதிபதிகளும் மந்திரிகள் கோஷ்டி வகுத்த நீண்டகாலத் திட்டத்தை அங்கீகரித்தன. இப்போது காங்கிரஸ் நிராகரித்துவிட்டபடியால் பெரிய ஓர் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

●

### மூன்றில் ஓர்பகுதி

காங்கிரஸ் தலைவர் மவுலானா அபுல் கலாம் அசாத், இராஜப்பிரதிநிதிக்குப் புதுயோசனை ஒன்றை அறிவித்ததாகத்தெரிகிறது. புது அரசாங்கத்தில் 15 பேர் இருக்கவேண்டுமென்றும், அதில் 5 ஸ்தானங்கள் முஸ்லிம் லீகிற்கும் மற்றும் 10 ஸ்தானங்கள் காங்கிரசிற்கும் அளிக்கப்படவேண்டும் என்றும் மௌலானா அசாத் யோசனை கூறினர். காங்கிரஸ் தனக்குரிய 10 ஸ்தானங்களில் தாழ்த்தப்பட்ட ஹிந்துக்களுக்கும், இந்தியக் கிறிஸ்தவர்களுக்கும், சீக்கியர்களுக்கும், அவசியமானல் பார்சியருக்கும் போதிய பிரதிநிதித்துவம் அளிக்க முன்வரும். மூன்று மந்திரிகளும் வகுத்த திட்டம் இந்தியாவில் காங்கிரஸ்,லீக் என்ற இரண்டே கட்சிகள் இருப்பாக ஒப்புக்கொண்டிருப்பதால்தான் இவ்வாறு கோருவதாகக் காங்கிரஸ் கூறுகிறது. சீக்கியர்கள் தனிச் சமூதாயமாகவும், இதர சிறுபான்மையினர்பொதுஸ்தானங்களுக்கென்றும் கருதப்பட்டு இத்திட்டப்படி ஸ்தானங்கள் ஒதுக்கப்படுமெனக் காங்கிரஸ் கருதுகிறது.

●

### நம்பிக்கை இன்னும் உண்டு

இராஜப் பிரதிநிதியும், மந்திரிகள் மூவரும், லண்டனிற் பிரதம மந்திரி அட்லியுடன் டெலிபோன்மூலம் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கின்றனர். எது எப்படியிருந்த போதிலும் ஓர்வித சமரசம் ஏற்பட்டே தீரும் என்று ஒரு நம்பிக்கை சகலரிடத்தும் காணப்படுகிறது.

## நூற் குறிப்பு

### மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம் (திருவாசகத்திரட்டுடன்)

பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளையால் இலகுவான இனிய தமிழ் வசனநடையில் எழுதித் திருவாசகத் திரட்டுந் தொகுத்துச் சேர்த்து வெளியிடப்பெற்றுள்ள இந்நூல் இப்பொழுது மூன்றும் பதிப்பாக வெளிவந்துள்ளது; இது கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சமயபாடப் பரீட்சைக்குரிய பாடங்களுளொன்றாக நியமிக்கப்பட்டிருப்பதோடு இலங்கையிலுள்ள சைவவித்தியாசாலைகளிலும் சைவ மாணவர்களுக்குச் சமயபாடமாக உபயோகிக்கப்படுவது. பிரதியொன்றின் விலை 1 ரூபா 25 சதம் (1¼ ரூபா) பிரதிகள் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பாகங்களிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளிலும் மேற்படி நூலாசிரியரிடத்தும் பெறற்பாலன.

எமது பார்வைக்குதவிய பிரதியின் பொருட்டு நன்றிகூறுகின்றேம்.

அ. க. சு.

## கீழ்நாட்டு மொழிப் பட்டதாரிகள் சங்கம்

(நமது நிருபர்)

இச்சங்கம் 13.6.46 வியாழக்கிழமை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் பி. ப 1 மணியளவில் கூடியது. இச்சங்கத்தின் நோக்கம்: தமிழ் சிங்களம், அறபு, சம்ஸ்கிருதம் முதலிய கீழ்நாட்டு மொழிக் கலைகளில் வித்துவான் பண்டித பட்டங்களும் இவற்றிற்குச் சமமான வேறு பட்டங்களும் பெற்ற ஆசிரியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டு, அவர்களுடைய நலங்களுக்குத் தொண்டு ஆற்றுவதாகும். சபையோரால் அங்கீகரிக்கப்பட்டு நியமனம் பெற்ற நிர்வாகசபை அங்கத்தவர்கள் வருமாறு:

தலைவர்: திரு. A. யோசேப்பு, சாதனா பாடசாலைத் தலைமையாசிரியர், சொழும்புத்துறை உபதலைவர்: திரு S. இளமுருகனார், பரமேஸ்வர ஆசிரியகலாசாலை திருநெல்வேலி. காரியதரிசி: திரு. S. R கந்தசாமி, விக்கினேஸ்வர வித்தியாசாலை மீசாலை தெற்கு. உபகாரியதரிசி: திரு. A. K. சிவசம்பு, விவேகானந்த வித்தியாசாலை, கொழும்பு. தனாதிகாரி: திரு K இராசையா, சைவ வித்தியாசாலை, கந்தர்மடம் அங்கத்தவர்கள்: பண்டிதர்கள் திருவாளர் M. நல்லதம்பி, S துரைசிங்கம், S தியாகராஜா, S பஞ்சாட்சரஐயா, A. சோமசுந்தரஐயர், K கிருஷ்ணபிள்ளை

சபையோரால் பிரேரிக்கப்பட்டு நிறைவேறிய தீர்மானம்:- பட்டதாரிகளாய் தராதரப்பத்திரமுடையோரும் இல்லாதவருமாகிய ஆசிரியர்கட்கு உயர்ந்தபடியான சம்பளத்திட்டம் வகுக்கப்படவேண்டுமென்பது

இத் தீர்மானத்தைக் கல்வி மந்திரியாருக்கும், கல்வி நிருவாகசபைக்கும், மந்திரிசபைக்கும் அனுப்புவதோடு, அவர்களைக் கண்டுபேசிக் கருமம் ஆற்றும்படி காரியதரிசியுள்ளிட்ட சிலரைத் தூதுக்கோஷ்டியாக அனுப்பவேண்டும் என்றும் தீர்மானிக்கப்படலாயிற்று.

### இராஜா பிறந்ததினக் கொண்டாட்டம்

13-6-46 வியாழககிழமை காலை 10 மணியளவில் 'மாட்சிமை தங்கிய அரசர் பெருமான்' பிறந்த தினக் கொண்டாட்டத்தை கண்டி, அம்பிட்டி இந்துதமிழ் வித்தியாசாலைமாணவர்கள் தேவாரபாராயணத்தோடு ஆரம்பித்தார்கள். பின்னர் 'இராஜ வாழ்த்து' மாணவிகளால் பாடப்பெற்றன. 'இராஜபக்தி' என்னும் விஷயம்பற்றி ஷை பாடசாலைத் தலைமையாசிரியர் ஸ்ரீ சொ. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்கள் சொற்பொழிவாற்றினர். பின்பு பாடசாலை மாணவ மாணவிகளால், 'கோலாட்டம்' 'கும்மி' என்பன சிறப்புற நடத்தப்பட்டன. பின்னர் சிற்றுண்டி வழங்கப்பட்டுத் தேவார பாராயணத்தோடு இனிது நிறைவேறியது.

## இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்

யாழ்ப்பாணம் நல்லூர் பொ நா. திருநாவுக்கரசு ஆகிய நான், யாழ்ப்பாணப்பட்டினத் தொகுதியிலிருந்து இலங்கைப் பாராளுமன்றத் தேர்தலுக்கு ஓர் அபேட்சகராக முற்படுவேன என்பதை இத்தால் அறிவிக்கிறேன் ஆயிரக் கணக்கான வாக்காளர்களுக்கு என்னை அறிமுகப்படுத்தச் சிபார்சுசெய்யுமாறு என்னை அறிந்துள்ள பன்னூற்றுக்கணக்கான அபிமானிகளைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். என்னைப் பொறுத்தவரையில் இந்த இலங்கையில் நசுக்கப்பட்ட, ஏமாற்றப்பட்டலட்சக்கணக்கானமக்களுக்கு சிங்களர்,தமிழர் என்ற பேதமின்றி சேவைபுரிய என்னை அர்ப்பணம் செய்கிறேன்.

இப்படிக்கு

பொ. நா. திருநாவுக்கரசு

312, காலிரோட், வெள்ளவத்தை

(Mis. 93, 18-6-46)

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவவதாரப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் வாய்க்கேட்டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளிபிடப்பட்டுள்ளன.

அந்தியம் பெருநிறத் தமல னவ்வகை
சிந்தைகோண் டிடுவழிச் செறிந்த பேரழன்
முந்தையின் வெம்பொறி மூவி ரண்டவாய்
வந்துமுன் குறுகலு மகிழ்ந்து நோக்கினன்

செக்கர் வானம்போன்ற செவ்விய நிறத்தைக்கொண்ட மலரசிதமாகிய பரமசிவன் அப்படி நினைத்தருளிய மாத்திரத்தே, எங்கும் பரந்தபெருநெருப்பு முன்போல ஆறு பொறிகளாய் மீண்டு பெருமானுடைய சந்நிதியையடைதலும்(பெருமான்)மகிழ்ச்சி யடைந்து நோக்கியருளினரென்பது கருத்து.

அவ்வகை யென்றது மேலேயுள்ள திருவிருத்தத்திற் குறிக்கப்பட்ட "நன்னுதல் விழிகளின் நல்குதிப்பொறி - ஆங்கிலவரைப்பு வரன் ஈண்டவுற்றவை - முன்னுற வரும்வகை...." யென்க; முந்தையின் - முந்திஅறு பொறிகளாய்த் தோன்றியவாறு. 65)

நீங்களிச் சுடர்களை நெறியிற் றுங்கியே
வீங்குநீர்க் கங்கையில் விடுத்திர் அன்னவை
ஆங்கவள் சரவண மமர வுய்க்குமால்
ஈங்கிது நும்பணி யென்றி யம்பினன்.

நீவிர் இந்தப் பொறிகளை முறையே சுமந்துசென்று பெருகுகின்ற வெள்ளத்தைக்கொண்ட கங்கையில் விடுவீர்களாக; அக்கங்கையானவள் அவைகளை அப்பொழுது சரவணவாவியிற் பொருந்தக் கொண்டுபோய்ச் சேர்ப்பாள்; இது உமக்குரிய கடன் என்று பரமசிவன் கூறியருளினரென்பது கருத்து.

நீங்களென்றது வாயுவையும் அக்கினியையும்; நீவிர் என்னுங் கருத்தமைந்த நீங்களென்னும் பதப்பிரயோகம் முதன்முதற் கந்தபுராணத்திலேயே காணப்படலாயிற்றெனப் பழைய நூல்களைப் படித்தோர் கூறுவர். முதல் வாயுதேவனும் பின் அக்கினிதேவனும் தாங்கிச் செல்கவென்பார் நெறியிற்றுங்கியேயென்றார் கங்கை எந்தநேரமும் பெருகிப் பாய்ந்தவண்ணமுள்ளதாதலின் இடுதிரென்னது ஓட 'விடுதிர்'' என்றார்: தம்முடைய திருவுளக் குறிப்பையுணர்ந்து கங்கை சரவணம் அமரவுய்ப்பாளாகலின் இறையவர் ஆங்கவள் சரவணமமரவுய்க்குமெனக் கூறியருளினரென்க; இது என்றது இப்பொறிகளைக் கங்கையில் விடுத்தல், (67)


அப்பெருங் கனலினை யடைதற் குன்னினும்
வெப்புறு மெமதுளம் வியர்க்கும் யாக்கையும்
ஒப்டரி சேர்துவம் யாங்க ளென்றலுந்
துப்புறழ் டடர்சடைப் பகவன் சொல்லுவான்

அந்தப் பெரிய நெருப்புப் பொறிகளைச் சமீபித்தற்கு நினைப்பினும் (உன்னுகின்ற) எங்கள் உள்ளம் வெதும்பும், எங்கள் சரீரமும் வியர்க்கும், இங்ஙனமானல், நாங்கள் சமீபத்திற் சென்று அக்கனலைப் பரிசித்துச் சுமப்பது எவ்வாறு என முறையிட, பவளம்போன்ற பரந்த சடையினையுடைய பரமசிவன் (பின்வருமாறு) கூறுகின்றார் என்பது கருத்து.

அந்தச் சமயத்திலும் வாயுதேவனும் அக்கினிதேவனும் தீப்பொறிகட்கு அண்மையில் நிற்றலின்றித் தூரத்தில் நின்றனராதலின் இப்பெருங் கனலென்னது அப்பெருங் கனலென்றாரென்க. அடைதற்குன்னின் உளம் வெதுப்புறும் யாக்கை வியர்க்குமாதலின் அப்பொறிகளை தாம் சமீபித்தல் பரிசித்தல் சுமத்தல் என்னும் இச்செயல்கள் தங்கட்கியலா என வாயுவும் அக்கினியும் முறையிட்டனரென்பதாம். (72)

### லேசான வேலை வேண்டுமாம்!

யுத்த சேவையில் ஈடுபட்டு இப்போது தொழிலில்லாது இருக்கும் பலர், வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருக்கின்றனர். இவர்களிற் பலர்க்கு அந்த ஸ்தாபன அதிகாரிகள் வேலை தேடிக்கொடுத்தும், இவர்கள் அவ்வேலைகளை ஏற்க மறுக்கிறார்களாம் சிலர் வேலைக்கமர்ந்த அடுத்தநாளே மீண்டும் வேலைக்குப் போக மறுக்கிறார்களாம்! யுத்தகாலத்திலே படடாளத்தில் செய்தமாதிரி சுலபமான வேலையும், "சொகுசான" வாழ்க்கையும், "சிகரட்", மதுபானம், முதலியவையும் இவர்களுக்கு வேண்டுமாம் கஷ்டமான வேலை செய்து சீவியத்தை நடத்தப் பின்னிற்கிறார்கள் என்று வேலை தேடிக் கொடுக்கும் ஸ்தாபன அதிகாரி ஒருவர் முறையிடுகிறார்.




எங்கும் கியாதிபெற்ற எமது ரேடியோ பீடிகளையே எப்பொழுதும் உபயோகித்து ஆனந்தம் அடையுங்கள்.

இலங்கையிற் பிரதம விநியோகஸ்தர்: எல்லாஊர்களிலும் கிடைக்கும் மொடேண் ஏஜென்சீஸ், சிலாபம், இலங்கை.

(Mis 185, 31—31-12-46.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தர் சரிதம் சாற்றும் உண்மைகள்

திருஞானசம்பந்தர் திருநக்ஷத்திரம் நிகழும் வைகாசித் திங்கள் ஆறு நாள் வந்துற்றது. தமிழகத்தின் பல இடங்களில் அந்நாள் கொண்டாடப்பட்டது. இச் சைவ பரமாசாரியர், சைவத் திருநெறியில் தனியிடம்பெற்றுச் சிறப்புடன் விளங்குபவர். இவர் வாழ்க்கை வரலாற்றிலிருந்தும் திருவாக்குகளிலிருந்தும் நாம் அறியவேண்டிய உண்மைகள் பல உள. அவற்றுள் அவரது சரிதத்திலிருந்து நேரே உணரக்கூடிய உண்மைகளில் ஒரு சிலவற்றை இண்டுக் குறிப்பிடுவாம். சம்பந்தப் பெருமானது வாழ்க்கைச் சிறப்புக்களுள் முதலிற் குறிப்பிடத்தக்கது அவர் அவதாரமும் வளர்ப்புமாம். "ஆதி அருமறை வழக்கம் அருகி, அரன் அடியார்பால பூதி சாதன விளக்கம் போற்றல் பெறாதொழியக் கண்டு" அவர் தந்தையாராகிய சிவபாத இருதயர் பெரிதும் கவன்றார். அவர் தாயாராகிய பகவதியாரும் "சார்பு மேம்படு சிறப்பால் கணவனார் கருத்திசைவார்". இவ்விருவரும் நிலையில் திரிந்த இருபாசமயங்களையும் நிராகரித்து, சைவத்தைக் காத்து வளர்க்கவல்ல தெய்வ ஆற்றல் படைத்ததோர் திருமகனைப் பெறவேண்டித் தவம்புரிந்தனர். இத்தவத்தின் பயனாகவே இறைவன் தன் 'திருவடி மறப்பிலாத' பெரியோன் ஒருவனை 'மைமடல் செய்து இம் மண்ணின்மேல் பிறக்குமாறு' செய்தருளினன். இதனால், பெற்றோர் தகுதியையும் அவர் செய்தவத்தையும் ஓரளவு பொருத்தே உளது பெரியோர் அவதாரம் என்னும் உண்மை விளங்கும். மற்றுமொன்று: பகவதியம்மையார் ஆளுடைய பிள்ளையார்க்குப் பாலூட்டிய அருமைப் பண்பினை, "மாமர் தாள் தாவும் அன்பே திருமுலை சுரந்து ஊட்டச் செய்தருளுவிப்பார்" என்னும் அரிய மொழிகளால் சேக்கிழார் அறிவித்துள்ளார். தாய்மார்கள் இக்குறிப்பதனையும் உணர்தல் பெரும்பயனுடைத்தாம்.

(2) ஆளுடையபிள்ளையார் தோணிபுரச் சிகரம் பார்த்து 'அம்மே'! 'அப்பா'! என்று அழுதருளினதும், அம்பிகை திருமுலைப்பாலூட்டி ஆண்டருளியதும் திருஞானசம்பந்தர்க்குரியனவும் அவர்க்கே உரிய தனிச்சிறப்புக்கள். எனினும், ஏனைச் சாமானியரும், உலகுக்கு அம்மையப்பராயுள்ளவரை நினைந்துருகி, "அம்மே! அப்பா! அடியேற்கு நின்பால் பெய்யன்பை அளித்தருள்; அடியேனை ஆண்டருள்; எனக்காரிங்கு இணை நீயலதே" என்றெல்லாம் சொல்லி அகங்குழைந்து வாராவின், அவரவர் தகுதிக்கேற்ப அவர்களையும் இறைவன் பொதுவகையில் ஞானசம்பந்தராக்குவான் என்னுமோர் குறிப்பு இங்குளது.

(3) திருஞானசம்பந்தர் திருக்கோலக்காவிற் பாடியருளிய திருப்பதிகத்திலும், பின்னர் அருளிச்செய்தவற்றிலும் இயற்கையழகின் வருணனையும், இறைவன் உமாசகாயன் என்னும் உண்மையும் பெரும்பாலும் தவறாது குறிப்பிடப்படுகின்றன. இயற்கையை இறைவன் திருமேனியாகக் கொண்டு போற்றுமாறு போற்ற வேண்டும் என்பதும், அவன் ஆண் பெண் வடிவினனாதலின் பெண்பிறப்பை இழிவாக நினைத்தல் பெருந்தவறும் பாவமுமாம் என்பதும் இவற்றால் உணரப்படுகின்றன.

(4) இனி, சம்பந்தப்பெருமான் திருநீலகண்ட யாழ்ப்பாணரிடத்தும் திருநாவுக்கரசரிடத்தும் காட்டிய பேரன்பு சைவம் சாதியைக் கடந்து தோன்றும் என்னும் உண்மையை விளக்குப. பெரும்பாணரைப் பிள்ளையார் சீகாழியில் எதிர்கொண்டழைத்துச் சென்றதும், "அளவில் மகிழ்ச்சியினார் தமை நோக்கி, 'ஐயர்! நீர் உள மகிழ இங்கணைந்த உறுதியுடையோம்'" என்று வரவேற்புமொழி புகன்றதும், பாணனார் பிள்ளையார் அருளும் திருப்பதிக இசையை அவர் பக்கலிலிருந்து யாழிலிட்டுப் பாட விரும்பிக் கேட்டு அநுமதிபெற்றதும், பிறவும் அவர்பால் 'அற்றைநாள் போல் என்றும் அகலா நண்புடன்' அமர்ந்திருந்ததும் பெரிதும் குறிக்கத்தக்கன. பிறப்பிற் சாதி பேணுதல் பெருந்தவறென்று தாம் உணர்வதாக மகாத்மாகாந்தி சின்னாள் முன்னர் தெரிவித்துள்ளார். மறையோரும் அடியாரும் என்றும் தம்மைச் சூழ்ந்து நிற்கும் நிலையிலுள்ள திருஞானசம்பந்தர், திருநீலகண்டப் பெரும்பாணரைத் தம்முடன் எங்கும் அழைத்துச் சென்றதும், ஆசாரியர் திருவுளமுணர்ந்து திருநீலநக்கர் என்னும் உண்மையந்தணர் இப்பாணனார்க்கும் அவர் மனைவியார்க்கும், தமது இல்லத்தில் தாம நாள்தோறும் எரியோம்பும் புனித இடத்தில் தங்க இடங்கொடுத்ததும், சிவபக்தியின்முன் தீண்டாமை பறந்துபோம் என்னும் சீரிய உண்மையைப் புலப்படுத்தும், மூண்டகோபமிடத்தும் என்னும் பண்டைப் பெருமறையும் இதனை முன்னமே பகர்ந்துளது. இன்று நம் இந்துக்கள் கடைப்பிடிக்கவேண்டிய செந்நெறி இதுவே.

(5) சம்பந்தர் தமது உபநயன காலத்தில் "அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே" என்று அந்தணர்களும் அனைவர்க்கும் தமக்குரிய தனியுரிமையுடன் உபதேசித்தருளினார். இதனையும் இந்துக்கள் ஊன்றிக் கவனித்தல் நன்றாம்.

(6) திருநாவுக்கரசரைத் திருஞானசம்பந்தர் முதன்முறை கண்டபோது 'அப்பரே!" என அன்புமீக்கூர அழைத்தருளிய அருமையும் போற்றத்தக்கது. சம்பந்தர்க்கு உபநயனஞ் செய்வித்த கலைமறையோர், அவரைத் தம "கண்முன்வரு தியானப்பொருள்" என்று இறைஞ்சினர், இவர், அப்பரைக் கண்டபோது, அவரைத் தம "கருத்திற் பரவு மெய்க்காதல் தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது" என்று தொழுதனர். இஃது சிவனடியார்கள் சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்படக்கூடாதவர்கள் என்பதைக் காட்டும்.

(7) சம்பந்தர் சிவகருணையுடையவர் என்பது, கொல்லி மழவன் மகளது முயலகன் நோயைத் தீர்த்தமை திருமருகலில் செட்டிப்பெண் துயர் நீக்க விடம் நீக்கியமை, செங்குன்றூரிற் சுரம் நீக்கியமை முதலிய செயல்களால் உணரப்படும்.

(8) சிவஞானம் கைவந்த இத்திருமகனார், நெடுந்தொலைவு யாத்திரை செய்து சைவம் பேணியதும், பாண்டிநாட்டில் பகைக்கு அஞ்சாது சென்று ஆலவாயண்ணல் புகழைத் தமிழ் ஞாலமெங்கும் மிக வைத்ததும் இவரது சிறப்புற்ற சமயத் தொண்டினைப் புலப்படுத்தும்.

(9) இறைவனைத் தந்தையெனக் கண்டு தளரா அன்பு செலுத்தி நமனோர்க்கு வழிகாட்டியதும், இறைவனும் இவரைத் தம் திருமகனெனவே பாராட்டிச்செய்த தனிச் சிறப்புக்களும் ஊன்றி நோக்கத்தக்கன. ஆவடுதுறையில் அரனார் கோயிலுட் புக்கு அங்கெழுந்தருளியுள்ள திருமேனியைப் பேசும் தெய்வமாகவே கண்டு சிவபாதவிருதயருக்குப் பொன் கேட்டுப் பெற்றமையால் திருக்கோயில்களில் சம்பந்தர் கண்டது சிவனையேயன்றி, பிறர் காண்கின்ற, சிவன் தங்கும் வடிவத்தை மட்டுமன்று என்னும் உண்மையை உணரலாம்.

(10) சம்பந்தப் பெருமான் ... "... பாட்டினர். காமாலரியாடைக்கரை சேர் கண்டத்தெம் பெருமான் கழல் வல்லால் பேணுதுள்ளமே" என்பது அவர் நெறி. அதனாலன்றோ அவர் திருவாக்கில் வேறு சிவமூர்த்தங்கட்கு வணக்கம் காணப்படவில்லை.

(11) சமண பௌத்தரொடு வாதஞ் செய்ய நேரிட்ட காலத்தும், சமயப் பொறையின் உண்மையை நோக்கி, சம்பந்தர் அரனார் திருவுளமறிந்த பின்னரே அக்காரியம் செய்யத் தலைப்பட்டார். சமணவாதி சமயங்கட்கும் தலைவர் சிவபெருமானே என்று அவர் உணர்ந்திருந்தார். திருப்பாசுரத்துப் பதிகமும் இக்கோட்பாட்டிற்குக் காரணம் சுட்டுரைத்துள்ளார். தமக்குத் தீங்கு செய்தார்க்கும் பதில் தீங்குசெய்ய விரும்பினாரல்லர். ஆயினும், தம் வரம்பு கடந்து பிறசமயங்களை நம்மைச் சீழ்க்க வருங்கால், தற்காப்புக்காகவும் உலகில் சைவப் பெருநெறி மன்னி நின்று உயிர்கட்கு உதவவும் வேண்டுவனவெல்லாம் செலுத்தல் கடனே என்பதைத் தம் செயலால் காட்டியருளினார், இதனை இந்நாட் சைவர் தம உளத்தில் நன்றாய்ப் பதித்தல் வேண்டும்.

(12) மறைக் கதவினைத் திறக்கப் பூசுரப் பெருமானும் சம்பந்தர் வேளாளர் குலத்தவராகிய அப்பரை வேண்டியதன உட்பொருளையுமுணர்ந்து ஆரிய மறையின் சிறந்த பொருளும் தமிழ் மறையின் செம்பொருளும் ஒன்றென்று சமரசம் பேணவேண்டும்.

(13) பெண்ணினத்தை ஆணுக்குப் பிற்குறும் தன்மையாகிய அபிப்பிராயத்தினைக் கூறுமறுத்து, பற்பல பதிகங்களிலும் அவர்களைச் சிறப்பொழுக்கமும் சிவபக்தியும் உடையவர்களெனச் சிறப்பித்துப் பாடியுள்ளமையும் போற்றற்குரியது. 'அழகு ஏதுக் கணி பாய்' என்று அங்கம் பூம்பாவையை, புண்ணியப் பதனுருண்டு பாம்பெழும் புகலிவேந்தர், 'அபயமுகத்தாற் கண்டார்,' கண்டதெப்பம்! 'கண்ணுதல் கருணை வெள்ளம்'" என்று சுவனச் செட்டியார் தம் திருமகளாரைச் சம்பந்தர் மணம்புரிந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தபோது அவர் அத்திருவார் பூம்பாவை தமக்கு மணம்புரிதலுற்றதென்று தெரிவித்து மறுத்தார். இவற்றால் பெண்ணுக்குள அருமைப் பெருமைகளையும் பண்பையும் உணர்தல் வேண்டும்.

(14) இல்லறம் உலகுக்கு நல்லறம் என்பதை நாட்டவேண்டியே நம் பரமாசாரியர் திருமணம்புரிய இசைந்தனர். ஆயினும், எம்போலியர்போல உலகவலையுண்டு தங்க மனையறம் வளர்த்துக் கொண்டிருந்தாரல்லர். 'இந்த இல்லொழுக்கம் வந்து சூழ்ந்தது. இவள் தன்னோடும் அரன் சிவனடிதான் சேர்வன்' என்று எண்ணிக் காதலியைக் கைப்பற்றிக் கைசேர்ந்தனர். திருமணங்காண வந்தோரனைவர்க்கும் அப்பதவி கிடைக்கும்படி அருளினார். இவையெல்லாம் நம் ஆசாரியர் நமக்குக் காட்டியருளிய வழிகளாகக் கண்டு, அந்நன்னெறியில் நாமும் நிற்கவும் பிறரை நிறுத்தவும் முயலுவோமாக. —சித்தாந்தி

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### புதன் யூன் 19

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 திருவாலங்காடு என் சுந்தரேசய்யர் வயலின் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 வாத்தியகோஷ்டி 8-30 வி கே வேலுக்குட்டிநாயர் பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 வி கே வேலுக்குட்டி நாயர் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக்கல்வி 2-30 முடிவு.

மாலை: 5 திருப்பாம்புரம் என் சிவசுப்ரமணியபிள்ளை பாட்டு 5.40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6.15 சித்ரகானம இசைத்தட்டு 6-45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 புதிய வெளியீடுகள் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 நமது தபால்பெட்டி 8 திருப்பாம்புரம் என் சிவசுப்ரமணியபிள்ளை பாட்டு 8-30 திருவாலங்காடு என் சுந்தரேசஐயர் வயலின் 9 ஆங்கில நிகழ்ச்சி 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ஐரோப்பிய சங்கீதம் 10 30 முடிவு.

### வியாழன் யூன் 20

காலை: 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஜி ஜானகி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 லயக் கோலம் இசைத்தட்டு 8-30 ஆர் ஷண்முகசுந்தரம் வீணை 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி எம் சௌந்தரராஜன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 அரசியலில் சர்வாதிகாரி பேச்சு 2-20 முடிவு.

மாலை: 5 ஜி ஜானகி பாட்டு 5-40 இசைப் பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் வானிலை 6-15 திருவெண்காடு பி சுப்ரமணியபிள்ளை நாகஸ்வரம் 6-30 சித்ரகானம் இசைத் தட்டு 6.45 கிராம நிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 மருங்காபுரி ஜி கோபாலகிருஷ்ணயர் வயலின் 9 ஜானகி நாடகம் 9-15 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-45 எஸ் எஸ் பரமசிவம் பிள்ளை பாட்டு 10 இசைவேளை 10.30 முடிவு.

### வெள்ளி யூன் 21

காலை: 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 கே ஆர் வெங்கடாசலம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 சிதம்பரம் ஜே வனசாக்ஷி பாட்டு 9 முடிவு.

1 ஆரம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 கே ஆர் வெங்கடாசலம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கோடைக் கல்வி 2.30 முடிவு.

மாலை 5 சிதம்பரம் ஜே வனசாக்ஷி பாட்டு 5-40 குரான்.ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் வானிலை 6-15 சித்ரகானம் இசைத் தட்டு 6-45 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7.30 தமிழில் செய்திகள் 7-45 செம்பொனார்கோயில் ஆர் கோவிந்தராமபிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் 9.15 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-45 உலக விவகாரங்கள் 10 இசைவேளை 10.30 முடிவு.

விளம்பரமின்றேல்
பெரும்பணமில்லை

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Tuesday June, 18, 1946.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org